**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR QUARRYING PROPOSAL OVER AN EXTENT OF 4.61.50 HA -M/s.P.K.SANKAR RAJ ROUGH STONE AND GRAVEL QUARRY, S.F.NO. 244/1 OF PAVALI VILLAGE, VIRUDHUNAGAR TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 17.06.2025, 11.00 A.M AT M/s.SRI RENUGADEVI THIRUMANA MANDAPAM, DOOR NO.1/161, MANGAMMAL SALAI,SENGUNDRAPURAM PANCHAYAT, VIRUDHUNAGAR TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | M.Sivakumar | : | Revenue Divisional Officer<br>Sattur,<br>Virudhunagar District. |
| 2 | Er. J. Hamoneth Joesun | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| 3 | Er. K. Keerthy | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| | As per Attendance Register | : | Public, Project proponent 74 Nos<br>(List enclosed) |

The public hearing was held on 17.06.2025 at 11.00AM at M/s.Sri Renugadevi Thirumana Mandapam, Door No.1/161, Mangammal Salai, Sengundrapuram Panchayat, Virudhunagar Taluk, Virudhunagar District under EIA Notifications, 2006 for the Quarry proposal over an extent of 4.61.50Ha - M/s.P.K.Sankar Raj Rough Stone and Gravel Quarry, S.F.No. 244/1 of Pavali Village, Virudhunagar Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Sattur, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinakaran" and "The New Indian Express" on 07.05.2025.He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per

the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written statements would also be received.

Further he stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The Revenue Divisional Officer, Sattur initiated the Public Hearing process. Subsequently, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s.P.K.Sankar Raj Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

Further, the public has furnished their views with respect to the project as follows –

**1. Mr. Munusamy, Chokkalingapuram**

He stated that he had submitted a petition on behalf of the villagers. He mentioned that the petition was handed over to the Revenue Divisional Officer and requested that the matter be thoroughly considered before granting any approval.

**2. Mr. Veluchamy, Seeniyapuram**

He stated that the noise from blasting activities at the nearby quarries in Seeniyapuram is highly disturbing, particularly affecting the sleep of children in the village. He further mentioned that the existing quarries are already causing significant adverse impacts. Therefore, he expressed his strong objection to the establishment of the proposed quarry.

**3. Mr. Ramar, Pavali**

He stated that Mr. Sankarraj, who operates the stone quarry, has been providing benefits to all the villagers and schools, and has also been assisting in the construction of roads. He supplies materials such as stones and aggregates at a lower cost for new house construction. Therefore, he expressed his support for the quarry.

**4. Mr. Aadhavan Vadivel, Pavali**

He stated that the villagers have no objection for granting permission for the proposed new quarry, provided that all rules and regulations are strictly adhered to. He noted that in the previous year, quarrying permissions were granted for survey numbers 101, 954, 83/5, and 33/5. Due to operations in these areas, natural drainage channels and paths leading to streams have been blocked, which has significantly affected the flow of water. As a result, water is not

reaching the canals as expected, particularly impacting the irrigation systems in Pavali village. He further pointed out that embankments formed by filling soil into pits along the quarry roads have also disrupted natural watercourses. He emphasized the need to restore these blocked streams and canals to their original state. He requested that authorities ensure proper monitoring of existing quarries to verify their compliance with the prescribed regulations. He also expressed concern over quarry trucks speeding near the Chatrapatti curve, leading to frequent accidents involving two-wheelers. In addition, dust from uncovered sand in these trucks is affecting public health. He therefore insisted that all sand loads must be properly covered with tarpaulin sheets during transport. In conclusion, he reiterated that the villagers are not opposed to the establishment of a new quarry, as long as it operates within the bounds of all applicable regulations.

**5. Mr. Azhagarsamy, Seeniyapuram**

He noted that the process document only includes Pavali and Chokkalingapuram but excludes Seeniyapuram, which is more affected. He said that farming and grazing have become difficult, and crops like cotton and maize are damaged due to dust. He also mentioned that blasting disturbs sleep and damages houses.

**6. Mr. Murugan, Kumaralingapuram**

He stated that the establishment of the quarry does not cause any inconvenience to the public. He noted that the quarry owner regularly contributes to temple festivals and public events in Pavali village and assists underprivileged families in building houses. Materials such as gravel and soil for construction and school infrastructure are being provided free of cost. He mentioned that the quarry is located at a considerable distance from the village and does not impact the residents. Operations are being carried out with proper government approval. He emphasized that having a nearby quarry is highly beneficial, as it reduces the difficulty of sourcing materials from distant locations. Trees have been planted around the site to minimize dust pollution. He expressed full support for the quarry, describing it as a 100% beneficial and appropriate project, and requested that permission be granted for its continued operation.

**7. Mr. Maniraj, Sengundrapuram**

He raised concerns about whether the quarry operations are strictly adhering to regulations. He stated that many quarry vehicle drivers often operate vehicles while speaking on mobile phones, leading to accidents. The one-way road leading from Pavali to Virudhunagar is not suitable for heavy vehicles, yet a large number of vehicles use the route, leads to frequent road damage and excessive noise. This causes distress to children, the elderly, and new drivers. He emphasized that rules must be strictly followed, and violations should be dealt with

appropriately.

**8. Mr. Venkataraman, Sundaralingapuram**

He stated that when he was serving as the Panchayat President, even during the rainy seasons when the village roads were damaged and the people were facing financial difficulties, the quarry owner helped by providing gravel for the village. He also donated books to schools. Therefore, he stated that the quarry operations should be carried out in accordance with the rules and regulations.

**9. Mr. Mareeswaran, Chokkaligapuram**

Mr. Mareeswaran stated that due to the presence of the quarry and continuous blasting, infants in cradles cry and are unable to sleep throughout the night. The houses tremble due to the blasting sounds. Blasting has been ongoing for the past six months, causing significant disturbance. Therefore, he expressed that the quarry is causing great hardship, especially to the residents living within half a kilometer from it.

**10. Mrs. Koppammal, Seeniyapuram**

She stated that due to the blasting, houses are shaking and people are unable to sleep throughout the night. It has become difficult to stay within the village because of the continuous blasting. Therefore, she requested that the issue be thoroughly considered before granting permission for the quarry.

**11. Mr. Palanichamy, Seeniyapuram**

He stated that the quarry is located near their village and that the noise from blasting affects goats and cattle. Therefore, he expressed that there is no need for the quarry and requested that the matter be carefully reviewed before granting permission.

**12. Mr. Chandran, Chokkaligapuram**

He stated that the quarry is located near their village and requested that permission for the quarry be granted in other survey numbers, not in the vicinity of their village.

**13. Mr. Palpandi, Seeniyapuram**

He stated that the quarry is located less than 1.4 kilometers from their village and expressed concern that Seeniyapuram was not included in the technical presentation. Therefore, he opposed the establishment of the quarry.

**14. Mr. Mariselvam, Seeniyapuram**

He stated that there are already several quarries operating in this area and soil has been excavated for many years. As a result, water flow in the streams has been obstructed. He emphasized that the existing quarries should be inspected first before granting permission for any new quarry.

**15. Mr. Kuttipandi, Seeniyapuram**

He stated that due to blasting near the quarry, there is excessive noise and significant disturbances. Hence, he requested that the matter be thoroughly reviewed.

**16. Mr. Kumaresan, Sundaralingapuram**

He stated that the stone quarry has been beneficial and added that Mr. Sankarraj has been providing financial assistance for children's educational expenses.

**17. Mr. Sundaramurthy, Seeniyapuram**

He said the damage caused by existing quarries is unbearable and requested that new quarry permission not be granted, warning that protests would follow otherwise.

**18. Mr. Varadharaj, Seeniyapuram**

He stated that due to the negative impacts, the quarry should not be permitted. He said that protests would definitely continue if permission is granted.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Sattur invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted and informed that the Minutes of the Meeting along with Compact Disc consisting the entire videographed Public Hearing will be forwarded to the SEIAA for further actions. He also thanked all and requested to furnish their views if any in written of petitions.

| | | |
|---|---|---|
| Total number of written petitions received | - | 07 |
| In Favour of the proposed quarry | - | 05 |
| Against the proposed quarry | - | 02 |

With this, the meeting came to the end.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

Revenue Divisional Officer
Sattur,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 8– pages, 74 persons)
2. Videograph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (Both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், பாவாலி கிராமம், புல எண். 244/1-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.P.K. சங்கர் ராஜ் உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 17.06.2025 முற்பகல் 11.00 மணியளவில் தி/ள்.ஸ்ரீ ரேணுகாதேவி திருமண மண்டபம், கதவு எண்.1/161, மங்கம்மாள் சாலை, செங்குன்றாபுரம் பஞ்சாயத்து, விருதுநகர் வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.மு.சிவக்குமார், | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 2 | பொறி. ஜே.ஹேமந்த் ஜோசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 3 | பொறி.க. கீர்த்தி | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| | வருகை பதிவேட்டின் படி | : | பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 74 நபர்கள்<br>(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், பாவாலி கிராமம், புல எண்.244/1-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.P.K. சங்கர் ராஜ் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் தி/ள்.ஸ்ரீ ரேணுகாதேவி திருமண மண்டபம், கதவு எண்.1/161, மங்கம்மாள் சாலை, செங்குன்றாபுரம் பஞ்சாயத்து, விருதுநகர் வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 17.06.2025 முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர், ஏனைய அரசு அதிகாரிகள்,பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினகரன்" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில்

07.05.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனத் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்புகூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன் பின் தி/ள்.P.K. சங்கர் ராஜ் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. <u>திரு. முனுச்சாமி, சொக்கலிங்காபுரம்</u>

திரு. முனுச்சாமி அவர்கள், எங்கள் ஊர் மக்களின் சார்பாக மனு அளிக்க வந்துள்ளேன். வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் மனுவை கொடுத்துவிட்டேன். ஐயா இதனை பரிசீலித்து எங்களுக்கு ஆவணம் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன் என்று கூறினார் (மனுவின் நகல் இணைக்கப்பட்டுள்ளது).

2. <u>திரு. வேலுச்சாமி, சீனியாபுரம்</u>

திரு. வேலுச்சாமி அவர்கள், சீனியாபுரம் அருகில் உள்ள குவாரிகளிலிருந்து வரும் வெடி சத்தத்தால் வீடுகளில் உள்ள குழந்தைகள் தூங்க முடியவில்லை என்றும்,

ஏற்கனவே உள்ள குவாரிகளால் பாதிப்பு ஏற்படுகிறது என்றும் தெரிவித்தார். மேலும், குவாரிக்கு ஆட்சேபனை தெரிவிக்கிறோம் என்று தெரிவித்தார்.

3. திரு. ராமர், பாவாலி.

திரு. ராமர் அவர்கள், கல்குவாரி நடத்தும் சங்கர்ராஜ் அனைத்து ஊர் மக்களுக்கும், பள்ளிகளுக்கும் தேவையான நன்மைகளையும் சாலை அமைக்க தேவையான உதவிகளையும் செய்து கொண்டிருக்கிறார். புதிதாக வீடு கட்டுவதற்கு கல், ஜல்லி போன்ற பொருட்களை குறைந்த விலையில் தருகிறார். அதனால் ஆதரவு அளிக்கிறேன் என்று தெரிவித்தார்.

4. திரு. ஆதவன் வடிவேல், பாவாலி

திரு. ஆதவன் வடிவேல் அவர்கள், புதியதாக குவாரிக்கு அனுமதி கேட்கிறார்கள். அனுமதி வழங்க எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், விதிமுறைகளை முறையாக கடைபிடிக்க வேண்டும். கடந்த ஆண்டு 101, 954, 83/5, 33/5 ஆகிய எண்களில் அமைந்துள்ள குவாரிகளுக்கு அனுமதி கொடுத்துள்ளீர்கள். அந்த குவாரிகளால் வரத்து கால்வாய்கள், ஓடைகளுக்கு செல்லும் பாதைகள் மறைக்கப்பட்டு நீர் வரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கால்வாயக்கு நீர் வரத்து இல்லை. ஏற்கனவே இருக்கின்ற குவாரிகளால் நீர்வழிப்பாதை தடுக்கப்பட்டு பாவாலி கிராமத்தில் உள்ள கால்வாய்களுக்கு வரும் நீர் வரத்து குறைகின்றது என்று தெரிவித்தார். குவாரி பாதைகளில் ஏற்படும் பள்ளங்களில் மண் நிரப்பப்பட்டு மேடு உருவாக்குவதால் நீர் வரும் பாதை தடுக்கப்படுகிறது. நீர் ஓடைகளையும், கால்வாய்களையும் சீரமைத்து கொடுக்க வேண்டும். முறையாக விதிகளை கடைபிடித்து குவாரியை இயக்கும் பட்சத்தில் எங்களுக்கு ஆட்சேபனையும் இல்லை. ஏற்கனவே உள்ள குவாரிகள் முறையாக இயங்குகின்றதா? என அதிகாரிகள் கண்காணிக்கவேண்டும். சத்திரப்பட்டி வளைவில் குவாரி வண்டிகள் வேகமாக வருவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றது. இருசக்கர வாகனங்கள் வளைவுகளில் விபத்துக்களை சந்திக்கின்றன. இதனை குவாரிகள் சரிசெய்ய வேண்டும். வண்டிகளில் உள்ள மணல் காற்றில் பறந்து பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துகிறது. எனவே வண்டியில் ஏற்றப்படும் மணல் தார்பாய் கொண்டு மூடிய நிலையில் எடுத்து செல்லவேண்டும் வேண்டும். எனவே, குவாரிகள் அமைவதில் ஆட்சேபனை இல்லை என்றும் தெரிவித்தார்.

5. திரு. அழகர்சாமி, சீனியாபுரம்

திரு. அழகர்சாமி அவர்கள், நீங்கள் தற்போது வழங்கிய தொழில்நுட்ப விளக்கத்தில் பாவாலி, சொக்கலிங்காபுரம் மட்டுமே இடம் பெற்றுள்ளது. சீனியாபுரம்

கிராமம் இடம் பெறவில்லை. சொக்கலிங்காபுரத்திற்கு பிரச்சனைகள் ஏதும் இல்லை. சீனியாபுரத்திற்கே பாதிப்பு உள்ளது. ஏன் எங்கள் ஊர் பெயர் சேர்க்கவில்லை. குவாரிக்கு அருகில் உள்ள ஊரிற்குதான் பாதிப்பு அதிகம். எனவே, அவர்களை கருத்தில் கொள்ளவேண்டும் என கேட்டுக்கொண்டார். சீனியாபுரம், சொக்கலிங்காபுரத்திற்கும் உள்ள தொலைவு குறைவாக உள்ளது. மேலும், குவாரி 1 கிலோமீட்டருக்கு உள்ளே வருவதால் ஆடு மேய்க்க முடியவில்லை, விவசாயம் செய்ய முடியவில்லை, கிராவல் தூசியினால் பருத்தி, சோளப்பயிர்கள் கருப்பாக மாறிவிடுகிறது. அதனால் விலைபோகவில்லை. வெடி போடுவதால் மக்கள் தூங்க முடியவில்லை. வெடி சத்தத்தினால் வீடுகள் சேதாரம் அடைகிறது என்று தெரிவித்தார்.

6. <u>திரு. முருகன், குமாரலிங்காபுரம்</u>

திரு.முருகன் அவர்கள், குவாரி அமைவதினால் பொதுமக்களுக்கு பாதிப்பு கிடையாது என்று தெரிவித்தார். பாவாலி கிராமத்திற்கு திருவிழாக்கள், பொதுநிகழ்ச்சிகளுக்கு குவாரி உரிமையாளர் உதவி செய்கிறார். கஷ்டப்படும் மக்களுக்கு வீடு கட்டி கொடுக்க அனைத்து உதவிகளையும் செய்து கொண்டு வருகிறார். வீடு கட்டவும், பள்ளிகூடத்திற்கும் தேவையான கிராவல், மண் ஆகியவற்றை இலவசமாக வழங்கி வருகிறார். மக்கள் நடக்கும் பாதைகளுக்கு சாலை அமைக்க உதவிகள் செய்துள்ளார். குவாரியானது ஊருக்கு அருகில் இல்லை. மிக தொலைவில் எந்த மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத இடத்தில் உள்ளது. கிராவல் எடுப்பதற்கு முறையாக அனுமதி வாங்கி நடத்துகின்றனர். குவாரி அமைவதினால் எந்த தவறும் இல்லை. வீடு கட்ட பொருட்கள் தொலைவில் இருந்து வாங்குவது சிராமமாக உள்ளபோது, இங்கு குவாரி அருகில் அமைவதால் எளிதாக மணல், சல்லி கிடைக்கிறது. அரசாங்கம் அனுமதித்த அளவிலேயே கிராவல் எடுக்கப்படுகிறது. அதனால் குவாரி எங்களுக்கு வரவேண்டும். சுற்றி மரங்கள் நடப்பட்டுள்ளது. அதனால் தூசிகளை கட்டுப்படுத்த முடியும். ஆகையால், இது மக்களுக்கு பயன்படும் திட்டமாக இருக்கும். 100 சதவீதம் உகந்த திட்டம். கண்டிப்பாக குவாரி வரவேண்டும். அதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

7. <u>திரு. மணிராஜ், செங்குன்றாபுரம்.</u>

திரு. மணிராஜ் அவர்கள், குவாரிகள் விதிமுறைகளை முறையாக கடைபிடிக்கின்றனவா? என்று கேள்விக்குறியாக உள்ளது. பெரும்பாலும் குவாரி வாகன ஓட்டிகள், செல்போன் பேசிக்கொண்டே வாகனம் ஓட்டுகின்றனர். இதனால் விபத்து ஏற்படுகின்றது. பாவாலியிலிருந்து விருதுநகர் செல்லும் ஒருவழிச்சாலை கனரக வாகனங்களை இயக்கக்கூடியது அல்ல. அதிகபடியான வாகனங்களை அச்சாலையில் ஓட்டி அதிகப்படியான ஒலியையும் எழுப்புகின்றனர். இதனால் குழந்தைகள்,

வயதானவர்கள் புது வாகன ஓட்டிகள் அச்சுறும் வண்ணம் உள்ளது. எனவே, விதிமுறைகளை முறையாக கடைபிடிக்க வேண்டும். மீறினால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

8. <u>திரு. வெங்கட்ராமன், சுந்தரலிங்கபுரம்</u>

திரு. வெங்கட்ராமன் அவர்கள், நான் பஞ்சாயத்து தலைவராக இருக்கும்பொழுது மழைக்காலங்களில் சாலைகள் சேதம் அடைந்திருந்தபோதும் ஊர் மக்களுக்கு நிதி பற்றாக்குறையாக உள்ள நேரத்திலும் குவாரி உரிமையாளர் ஊருக்கு கிராவல் கொடுத்து உதவி செய்துள்ளார். பள்ளிகளுக்கு புத்தகங்கள் வாங்கி கொடுத்துள்ளார். எனவே குவாரிகளை விதிமுறைகள்படி இயக்கவேண்டும் என தெரிவித்தார்.

9. <u>திரு. மாரீஸ்வரன், சொக்கலிங்காபுரம்</u>

திரு. மாரீஸ்வரன் அவர்கள், இங்கு குவாரி இருப்பதால், வெடி வெடிப்பதால் தொட்டிலில் உள்ள குழந்தைகள் அலறி இரவு முழுவதும் தூங்கமுடியவில்லை. வீடுகள் வெடி சத்தத்தினால் அதிர்கிறது. ஆறு மாதமாக வெடி போடுகின்றனர். அதனால் பாதிப்பு அதிகமாக உள்ளது. எனவே, குவாரி வருவதால் கஷ்டமாக உள்ளது. அரை கிலோமீட்டர் தொலைவிற்குள் உள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

10. <u>திருமதி. கோப்பம்மாள், சீனியாபுரம்</u>

திருமதி. கோப்பம்மாள், அவர்கள், வெடி வெடிப்பதால் வீடுகள் அதிர்ந்து போகின்றது. இரவு முழுக்க தூங்க முடியவில்லை. வெடி வெடிப்பதால் ஊருக்குள் இருக்க முடியவில்லை. எனவே, நன்றாக பரிசீலினை செய்து குவாரிக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

11. <u>திரு. பழனிச்சாமி, சீனியாபுரம்</u>

திரு. பழனிச்சாமி அவர்கள், எங்கள் ஊர் பக்கத்தில் தான் குவாரி உள்ளது. ஆடு, மாடுகள் வெடி சத்தத்தால் பாதிப்பு அடைகின்றன. அதனால் குவாரி தேவையில்லை. எனவே, நன்றாக பரிசீலினை செய்து குவாரிக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

12. <u>திரு. சந்திரன், சொக்கலிங்காபுரம்</u>

திரு. சந்திரன் அவர்கள், எங்கள் பக்கத்தில் தான் குவாரி உள்ளது. வேறு சர்வே எண்களில் குவாரிக்கு அனுமதி கொடுங்கள். எங்கள் ஊர் பக்கத்தில் கொடுக்கவேண்டாம் என கேட்டுக்கொண்டார்.

13. திரு. பால்பாண்டி, சீனியாபுரம்

திரு. பால்பாண்டி அவர்கள், குவாரிக்கும், ஊருக்கும் 1.4 கிலோமீட்டர் தொலைவிற்கு குறைவாகவே உள்ளது. சீனியாபுரம் கிராமம் உங்கள் தொழில்நுட்ப விளக்கத்தில் இடம் பெறவில்லை என தெரிவித்தார்.

குவாரி அமைவதினால் எந்த ஆட்சேபனையும் இல்லை. குவாரி உரிமையாளர் மக்களுக்கு அனைத்து தேவையான நன்மைகளும் செய்து கொண்டிருக்கிறார். செய்வார். எந்தவித பாதிப்பும் இல்லை. எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார்.

14. திரு. மாரிச்செல்வம், சீனியாபுரம்

திரு. மாரிச்செல்வம் அவர்கள், ஏற்கனவே இந்த பகுதிகளில் நிறைய குவாரிகள் உள்ளன. பல வருடமாக மண் அள்ளிக்கொண்டு இருக்கின்றனர். அதன் காரணமாக ஓடையில் நீர் வரத்து இல்லை. ஏற்கனவே உள்ள குவாரிகளை ஆய்வு செய்ய வேண்டும். அதன்பிறகு புதிய குவாரிக்கு அனுமதி வழங்கவேண்டும் என்று தெரிவித்தார்.

15. திரு. குட்டிப்பாண்டி, சீனியாபுரம்

திரு. குட்டிப்பாண்டி அவர்கள், குவாரி அருகில் வெடி வெடிப்பதால் இரைச்சலாக உள்ளது. அதிக பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, பரிசீலினை செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

16. திரு. குமரேசன், சுந்தரலிங்கபுரம்

திரு. குமரேசன் அவர்கள், கல்குவாரியினால் நன்மையே என்றும், சங்கர்ராஜ் அவர்கள் குழந்தைகளுக்கு கல்வி கட்டணம் கட்ட உதவி செய்கிறார் என்று தெரிவித்தார்.

17. திரு. சுந்தரமூர்த்தி, சீனியாபுரம்

திரு. சுந்தரமூர்த்தி அவர்கள், ஏற்கனவே உள்ள குவாரிகளினால் ஏற்படும் பாதிப்பு தாங்கமுடியவில்லை. புதிதாக குவாரி தொடங்க அனுமதி வழங்கக்கூடாது. இல்லையேல் போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்தார்.

18. திரு. வரதராஜ், சீனியாபுரம்

திரு. வரதராஜ் அவர்கள், குவாரி அமைவதினால் பாதிப்பு ஏற்படுவதால் குவாரி அமைக்ககூடாது இல்லாவிட்டால் போராட்டம் கண்டிப்பாக தொடரும் என தெரிவித்தார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறுயாரும் முன்வராததால்,வருவாய் கோட்டாட்சியர்,சாத்தூர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ அடங்கிய குறுந்தகடு மற்றும் எழுத்துபூர்வமான கூட்ட நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு பரிசீலினை செய்யும் பொருட்டு அனுப்பிவைக்கப்படும் எனவும்,மேலும்,எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

| | | |
|---|---|---|
| எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 07 |
| உத்தேசிக்கப்பட்ட குவாரிக்கு ஆதரவாக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 05 |
| உத்தேசிக்கப்பட்ட குவாரிக்கு எதிராக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 02 |

அத்துடன் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

வருவாய் கோட்டாட்சியர்,
சாத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் - 8 பக்கங்கள், 74 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).